# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2273/09 - 2022 මාර්තු මස 28 වැනි සඳුදා - 2022.03.28

*2273/09 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி திங்கிட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி தாபனங்களின் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்ளூராட்சி தாபனங்களின் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 எ ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 66 இ பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்**

மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் அல்வல தேவகே பிரபாத் இந்திக பிரசன்ன ஆகிய நான், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி தாபனங்களின் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்ளூராட்சி தாபனங்களின் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 எ ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 66 இ ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க மேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள கட்டான பிரதேச சபையில் வெற்றிடமாகி உள்ள துணைத் தலைவரின் பதவிக்காக புதிதாக துணைத் தலைவர் ஒருவரினை தெரிவு செய்யும் விடயத்திற்கான கூட்டம் 2022 ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கட்டான பிரதேச சபை, தேமன்ஹந்திய என்ற முகவரியில் அமைந்துள்ள கட்டான பிரதேச சபைக் கூட்ட மண்டபத்தில் கூட்டப்படும் என்பதனை இங்கு அறிவிக்கின்றேன்.

**ஏ. டீ. பீ. ஐ. பிரசன்ன,**
உள்ளூராட்சி ஆணையாளர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண உள்ளூராட்சித் திணைக்களம்,
இல. 204,
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2022, மாச்சு 28.

EOG 03-1019